17. அழுக்காறாமை

161. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்*
தழுக்கா றிலாத இயல்பு

பிறருடைய நல்வாழ்க்கையைக் கண்டு
பின்னும் பொறாமை மனதில் கொள்ளாமல்
பிழையில்லா வாழும் இயல்பை
பின்பற்றுகிற ஒழுக்க நெறியாய் கொள்ள வேண்டும் !

162. *விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்*
அழுக்காற்றின் அன்மை பெறின்

யார் ஒருவரிடமும் பொறாமை கொள்ளாத பண்பு
யார் ஒருவருக்கு வாய்க்கிறதோ
யாங்கு ஒப்பில்லா பேறாகும் !

163. *அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்*
பேணா தழுக்கறுப் பான்

அறநெறியும் வளர்ச்சியையும்
அறவே விரும்பாதவன் தான்
அடுத்தவர் பெருமையைப் போற்றாமல்
அழுக்காறாமை எனும் பொறாமை கொண்டவன் !

164. *அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்*
ஏதம் படுபாக் கறிந்து

தீய வழியில் சென்றால் துன்பம்
தீண்டும் என்று அறிந்தவர்கள்
தீமை தரும் பொறாமையினால்
தீய செயல்களில் ஈடுபடமாட்டார்கள் !

165. *அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்*
வழுக்கியுங் கேடீன் பது

அழுக்காறாமை குணம் கொண்டவர்களுக்கு
அவர்களை வீழ்த்த பகைவரின் பகை தேவையில்லை !
அத்தகைய குணமே தீங்கிழைத்து
அவர்களுக்கு பெரும் பகையாகி விடும் !

166. *கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
உண்பதூஉ மின்றிக் கெடும்

கொடுக்கும் உதவிகளை பார்த்துக் கூட
கொஞ்சமும் வெட்கமில்லாமல் பொறாமை
கொண்டால் அவனின் உறவு
கொண்டவருக்கும் கூட “உடை”யும் “உணவு”ம் கெடும் !

167. *அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்*
தவ்வையைக் காட்டி விடும்

அழுக்காறாமை கொண்டவனை காணும் இலக்குமி தன்
அக்காள் மூதேவி எனும் வறுமையை
அடையாளம் காட்டிவிட்டு எப்போதும்
அகன்று விடுவாள் !

168. *அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்*
தீயுழி உய்த்து விடும்

அழுக்காறு என்று அடையாளம் காணப்பட்ட பாவி
அங்ஙனமே ஒருவனின் செல்வத்தையும் அழித்து
அவனையும் தீய வழியிலே செலுத்தும் !

169. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
கேடும் நினைக்கப் படும்

பொறாமை கொண்டவன் வளமாக வாழ்வதும்
பொறாமை குணம் இல்லாதவன்
பொல்லா வறுமையில் வாடுவதும் எதன்
பொருட்டு என ஆராய வேண்டும் !

170. *அழுக்கற் றகன்றாரும் இல்லையஃ தில்லார்*
பெருக்கத்தில் தீர்ந்தாரு மில்

பொறாமை கொண்டு எப்போதும்
பெருமை அடைந்தாரும் இல்லை !
பொறாமை கொள்ளாததால்
பொல்லாங்கு பெற்று வீழ்ந்தாரும் இல்லை !